பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 25 திங்கட்கிழமை 11.09.2023 கதிர் 304

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக

# சர்வதேச விசாரணைக்கு சஜித் மீண்டும் வலியுறுத்து

அதன் மூலமே பொறுப்புக்கூறவேண்டியோர் வெளிப்படுத்தப்படுவர் என்றும் தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை ஊடாகவே தொடக்கத்தையும், முடிவையும் வெளிக்கொண்டுவர முடியும் என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஹிக்கடுவையில்நேற்றுநடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிவதே தேவையாக உள்ளது. நீதி கிடைக்க வேண்டி உள்ளது அதன் மூலம் பொறுப்புக்கூறப்படவேண்டும். உண்மையை கண்டறிவதன் ஊடாக பொறுப்புக்கூறவேண்டியவர்களும்

## இது ரகசியம் அல்ல!

கலி முற்றிவிட்டது, உலகம் அழியப் போகிறது என்பார்கள் மூத்தவர்கள். சகிக்க முடியாத அளவிற்கு ஒரு விடயம் இடம்பெறும்போதே இப்படிச்சொல்வார்கள். அத்தகைய ஒரு சம்பவத்தைத்தான் இன்று உங்களுடன் பகிர்ந்துகொள்ளப் போகின்றேன்.

வவுனியாவில் உள்ள ஆலயம் ஒன்றின் பெருந்திருவிழாவின் போது அதனை நிகழ்த்தும் சிவாச்சாரியார்களில் ஒருவர் மது போதையில் மாவா மற்றும் சாராயப் போத்தலுடன் ஆலயத்திற்கு வந்துள்ளார். அதனைஅவதானித்தபொதுமக்கள்அவரை அங்கிருந்து விரட்டியடித்துள்ளனர்.

வவுனியாபிரதேசசெயலகஇந்துகலாசார உத்தியோகத்தரின் கண்காணிப்பின் கீழ் உள்ளஆலயம்அது. அதன்பெருந்திருவிழா நடந்துவருகின்றது. அதனைநிறைவேற்றும் சிவாச்சாரிகயார்களில்ஒருவர்ஆலயத்திற்கு நேற்று இரவு போதையில் மேலும் சராயப் போத்தல்களுடன் வருகைதந்தமைபெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டது.

## நாளை கூட்டம்

(ந.லோகதயாளன்.)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வன வளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் ஆகியவற்றினால் விடுவிக்கப்படவும் புதிதாக சுவீகரிக்கப்படவும் உள்ளநிலம்தொடர்பில்நாளையாழ். மாவட்டச் செயலகத்தில் ஆராயப்படவுள்ளது.

1985ஆம்ஆண்டிற்குமுன்புநாட்டில்வனப் பகுதியாக இருந்தவை தவிற எஞ்சியவற்றை விடுவிப்பது தேசிய கொள்கை ரீதியிலான முடிவு எனக் கூறப்பட்டாலும் குறிப்பிட்ட அளவு நிலத்தை மட்டுமே விடுவிக்க இணங்கும் இரு திணைக்களங்களும் புதிதாகவும் நிலங்களை சுவீகரிப்பதற்கானமுன்மொழிவினையும் முன் வைத்துள்ளனர்.

சனல் -4 காணொளி குறித்து ஆராய

## ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழு நியமனம்

நாடாளுமன்ற தெரிவுக் குழுவும் அமைக்கப்படும்

சனல்4தொலைக்காட்சி அண்மையில் ஒளிபரப்பிய சர்ச்சைக்குரிய ஆவண நிகழ்ச்சியின் மூலம் வெளிப்படுத்தப்பட்டதகவல்கள் மற்றும் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள்தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதியரசர் தலைமையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குழுவொன்றை நியமிக்கவுள்ளார்.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் உண்மையைக் கண்டறியவும்நீதியைநிலைநாட்டவும் சாதகமானநடவடிக்கையாக ஜனாதிபதி இந்தக் குழுவை நியமிக்க உள்ளார்.

நாசகாராஈஸ்டர்குண்டுத் தாக்குதலின்பின்னணியில் பிரதான சூத்திரதாரி ஒருவர் இருப்பதாக முன்னாள் சட்டமாஅதிபர்இதேபோன்ற குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளார். எனவே இந்த நிலைமை எரியும் நெருப்பில் வைக் கோல் சேர்ப்பது போன்ற சூழ்நிலையை உருவாக்கி யுள்ளது. இந்தப் பிரச்சினை களை பரந்தளவில் கவனத்திற்குக்

## ஆசாத் மௌலானவைப் பயன்படுத்தி 'வஹாப்பிச' தீவிரவாதிகள் தப்ப முயற்சி

பிள்ளையான் தரப்பின் கண்டனப் போராட்டத்தில் தெரிவிப்பு

மட்டக்களப்பில்உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் விசாரணைகளை பகிரங்கப் படுத்த கோரி 'குண்டுத் தாக்குதலை திசை திருப்பாதே, உண்மையை உலகறியச் செய்' எனும்தொனிப்பொருளில் கண்டன பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்மக்கள்விடுதலைப் புலிகள் கட்சியால் நேற்று ஒழுங்கு செய்யப்பட்ட இக் கண்டனப் பேரணியானது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமை காரியாலயத்திலிருந்து கல்லடி பாலம் வரை முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதனையடுத்து காந்தி பூங்காவில் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு நகரில் நடைபெற்ற இக்கண்டனப் பேரணியின் போது சனல்-4 காணொளிக்கு எதிராகவும், அசாத் மௌலானவுக்கு எதிராகவும்கண்டனக்

## தோட்ட தொழிலாளி வீடு மீது இரத்தினபுரியிலும் தாக்குதல்

திகா எம்.பி. கடும் கண்டனம்

இரத்தினபுரிவெள்ளந்துர தோட்ட சம்பவம் மிலேட்ச தனமானது என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தொழிலாளர் தேசியமுன்னணியின்தலைவருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இரத்தினபுரிமாவட்டத்தில் காவத்தபெருந்தோட்டகம்பனி நிர்வாகத்தின்கீழ் இருக்கும் வெள்ளந்துர தோட்டத்தில் ஒருகுடியிப்பாளரின் வீடுமீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது மிலேச்சத்தனமானது. பெருந்தோட்டகம்பனிகளின் சர்வாதிகார போக்கினையும், அவர்களின்காட்டுமிராண்டித் தனத்தையும் காட்டுகிறது.

மாத்தளை ரத்வத்த தோட்ட சம்பவம் நடந்து ஒரு மாதம் கூடமுழுமையாத நிலையில், இவ்வாறான சம்பவம் இடம்பெற்றிருப்பது அரசகட்டுபாட்டுக்குள்பெருந் தோட்டகம்பனிகள் இல்லை என்பதை நிருபிக்கும் வகையில் அமைந்திருக்கிறது.

200 வருடங்கள் அல்ல 300 வருடங்களானாலும் பெருந்தோட்டகம்பனிகளின் நடத்தைகளில் மாற்றம் ஏற்படபோவதில்லை. அவர்களின் கடும்போக்கும் மாறப் போவதுமில்லை.

ஆட்சியாளர்களும்இவாறான சம்பவங்கள் இடம்பெறும்போது வேடிக்கை பார்ப்பவர்களாக இருக்கின்றார்களே தவிர உரிய நடவடிக்கைகள் எடுப்பதில்லை.

மாத்தளை ரத்வத்தை சம்பவத்திற்குச் சரியான சட்ட நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று இவ்வாறு இடம்பெற்றிருக்காது. தொடந்தும் அரசு வேடிக்கை பார்க்காது விரைந்து

## உண்மை வெளிவராது ஜே.வி.பி திட்டவட்டம்

என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

பதுளையில் நேற்று நடைபெற்ற கட்சியின் மக்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோது பாதுகாப்புஅமைச்சின்ஊடாக அறிக்கையொன்றை வெளியிட்டார்.

அதில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்தையும்வெளிப்படுத்தப்போவதாககூறப்பட்டுள்ளது. தாக்குதல் நடைபெற்றபோது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க தற்பொழுது ஜனாதிபதியாக இருக்கிறார்.

அன்று தாக்குதல் நடைபெற்ற பொழுது புலனாய்வுபிரிவின்பிரதானியாக இருந்தவர் தற்பொழுது பொலிஸ் நிர்வாகப் பிரிவின் பிரதானியாக உள்ளார். பிள்ளையான் இப்பொழுது ஆளும் தரப்பின் இராஜாங்க அமைச்சராக உள்ளார். சுரேஷ் சாலே தாக்குதல் தொடர்பில்தொடர்பில்குற்றம் சாட்டப்படுகின்றார். அவர் கோட்டாபயவை குற்றம் சாட்டிய ஒருவர்.

இவ்வாறான நிலையில் தாக்குதல் நடைபெற்ற போது அதனை தடுக்காது இருந்தவர்களும், அதனை அறிந்து தடுக்காது அசமந்தமாக இருந்தவர்களும் தற்போதுஆட்சியில்இருக்கின்றார்கள். மக்கள் தற்போது விசாரணைகளை முன்னெடுக்குமாறு கோருகின்றபோது அவர்களேவிசாரணைகளை முன்னெடுக்கப் போவதாக கூறுகிறார்கள். அவர்கள் உண்மைகளைக் கண்டறிவார்களா? ஒருபோதும் கண்டறிய மாட்டார்கள்.

உயிர்த்தஞாயிறு

## ராஜபக்ஷக்களுக்கும் பெரமுனவுக்கும் சர்வதேசத்தினால் கடும் அச்சுறுத்தலாம்

ராஜபக் ஷக்களுக்கும் பொதுஜனபெரமுனகட்சிக்கும் சர்வதேசத்தால் கடும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று இராஜாங்கஅமைச்சர்இந்திக்க அநுருத்த தெரிவித்தார்.

பெலியத்தவில் நேற்று நடைபெற்ற பெரமுனவின் மக்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மஹிந்த ராஜபக் ஷவுக்கும் நாமல் ராஜபக்வுக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் சஜித் பிரேமதாசவாலோ, மைத்திரிபால சிறிசேனாவாலோ, அநுரகுமார திஸாநாயக்கவாலோ எவ்விதமான அச்சுறுத்தலும் இல்லை.

உண்மையில்மஹிந்த ராஜபக் ஷ, நாமல்ராஜபக் ஷ உள்ளிட்ட ராஜபக்ஷ

அரச அலுவலகங்கள் மீதான

## இணையத் தாக்குதல்களால் தகவல்கள் பலவும் மாயம்

இலங்கையின்நடைபெற்றுள்ளஇணையதாக்குதலால் பல அரச நிறுவனங்களின் அத்தியாவசிய தரவுகள் காணாமல் போயுள்ளன எனத்தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில்இலங்கை தகவல்மற்றும்தொடர்பாடல் தொழில்நுட்பநிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மகேஷ் பெரேரா தெரிவித்துள்ளதாவது:

இலங்கையின் பல அரச நிறுவனங்களின் இணையங்கள் மீதான தாக்குதல்கள் இந்த ஆண்டு மே17 முதல் ஒகஸ்ட் 26 ஆம் திகதிவரைநடைபெற்றுள்ளன.

இதனால்அமைச்சரவை அலுவலகம் உட்பட 300 அரச அலுவலகங்களின் சுமார் 5,000 மின்னஞ்சல் முகவரிகளின் தகவல்கள் தொலைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

ஜனாதிபதி அலுவலகம், அமைச்சரவை அலுவலகம், கல்வி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றின்கீழ்உள்ளசில

## நாடாளுமன்றில் சொல்லப்படுபவை எல்லாமே உண்மையானவை அல்ல

சுகாதார அமைச்சர் கருத்து

நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்படும் கருத்துகள் எல்லாம்உண்மையானவை அல்லஎன்றுசுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கண்டியில்நேற்றுஅவர் நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பின்போது, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கும் புலனாய்வுப்பிரிவின்அதிகாரி சுரேஷ்சாலேவுக்கும் இடையில் தொடர்பு உள்ளதாக நாடாளுமன்றில் தொடர்ச்சியாக கூறப்படுவது தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்படுகின்ற அனைத்து கருத்துக்களும் உண்மையானவை அல்ல நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சில நேரங்களில் மிகவும் தவறான பொய்களை வெளிப்படுத்துவார்கள்.

தமது அரசியல் இலாபத்திற்காக அவர்கள் அதிகமான செயற்பாடுகளை முன்னெடுப்பார்கள் அரசியல் நலன்களுக்காக அவர்கள் உண்மையை மறைத்துள்ளமையைக்கடந்த காலத்தில்பலசந்தர்ப்பங்களில் கண்டறிய முடிந்துள்ள.

நாடாளுமன்றத்தில் யாரோ ஒருவர் பேசியதை பார்த்து முன்னாள் அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்த விடயத்தைப் பற்றி தொடர்ச்சியாக பேசி வருகிறார்கள் ஆகவே அவர்களின் கூற்றின் அடிப்படையில் தீர்மானம் எடுப்பது தவறா

## எவருக்குமே உண்மையாக இருக்கமாட்டார் மைத்திரி

உதய கம்மன்பில விளாசல்

முன்னாள்மைத்திரிபால சிறிசேன எவருக்கும் உண்மையாக இருக்க மாட்டாரென பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

எதுல்கோட்டையில் உள்ள தனது கட்சி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபாலசிறிசேனஎவருக்கும் உண்மையாகஇருக்கமாட்டார் என்பதைநாட்டுமக்கள்நன்கு அறிவார்கள்.

2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு நாள் இரவு மஹிந்த ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷக்களுடன் ஒன்றிணைந்து அப்பம் சாப்பிட்டுவிட்டு மறுநாள் காலை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட பொதுவேட்பாளராக போட்டியிடுவதாக அறிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குகூட மைத்திரிபால சிறிசேன உண்மையாக இருக்கவில்லை. அரசமைப்புக்கு முரணாக மஹிந்த ராஜபக்ஷவை

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஆத்திரமடைந்த மக்கள் அவரை ஆலயத்தைவிட்டு பலவந்தப்படுத்தி வெளியேற்றிவிட்டனர்.

மற்றொரு குருக்களை வரவழைத்து போதையில் இருந்த குருக்களை அவரிடம் ஒப்படைத்து ஆலயத்தில் இருந்து வெளியேற்றியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினரால் மாவட்ட அந்தணர் ஒன்றியம், மாவட்ட மற்றும் பிரதேச செயலக இந்து காலாசார உத்தியோகத்தர் ஆகியோரிடமும் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியாவில் சில குருமார் தொடர்பான பல முறைப்பாடுகள் அண்மைகாலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஆலயங்கள் புனிதமான இடம், மனக்கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளவேண்டிய இடம்என்றுபறைசாற்றப்படும் நிலையில் ஒரு குருக்களே இப்படிநடந்துகொண்டிருப்பது கலிகாலமன்றி வேறென்ன?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுவார்கள்.

குறித்த சம்பவத்திற்கு பொறுப்புக்கூறப்படுவதோடு சம்பந்தப்பட்டவர்கள் அதனைப் பொறுப்பேற்கவும் வேண்டியுள்ளது. நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் பெரும் குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்டது.

அப்போது எனக்கு எதிராக போட்டியிட்டவர்கள், இந்த மிலேச்சத்தனமான தாக்குதலை மேற்கொண்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று உறுதிஅளித்தார்கள்.அவ்வாறு இதுவரை நடந்துள்ளதா? வெளிப்படையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதா?

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதிதேர்தலில்வழங்கப்பட்ட மேற்படி உறுதிமொழிகளைமீண்டும்2020ஆம் ஆண்டு பொது தேர்தலின் போதும் வழங்கினார்கள். அது தொடர்பில் நீதியை நிலை நாட்டுவதற்கு மகா சங்கத்தினரும் மதத் தலைவர்களும்தொடர்ச்சியாககுரல் கொடுத்தார்கள். அதற்காக அவர்கள் பல தியாகங்களை செய்தார்கள்.

ஆனால் அவை அனைத்தும் இப்பொழுது பொய்யாகப்பட்டுள்ளன. பயங்கரவாதிகளைக் கைது செய்வதாக வாக்குறுதி அளித்துமக்கள்ஆணையைப் பெற்றவர்கள் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்த முதல் நாளிலிருந்து தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய விடயங்களை குறிப்பாக தகவல்களை மறைப்பதையே முதற்காரியமாக முன்னெடுக்கத் தொடங்கினார்கள்.

தொடர்ச்சியாக ஏமாற்றி வந்தார்கள். தற்பொழுது அந்த சம்பவம் பற்றிய விடயம் குழப்பமான நிலையை ஏற்படுத்தி உள்ளது. ஆகவே நியாயமான சர்வதேச விசாரணை ஒன்றின் மூலமாகவே உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் தொடக்கத்தினையும் முடிவையும் வெளிக்கொண்டுவர முடியும் என்பதே எமது தெளிவான நிலைப்பாடாக உள்ளது.

என்னைப் பொறுத்தவரையில் சர்வதேச விசாரணைகளை நான் விரும்பவில்லை. ஆனால் 2019 மற்றும் 2020ஆம் ஆண்டு மக்கள் ஆணை மூலம் ஆட்சிக்கு வந்தவர்கள் இந்த நாட்டின் 220 இலட்சம் மக்களையும் முட்டாள்களாக்கியுள்ளனர் இதனால் தான் சர்வதேச விசாரணையை தற்போது வலியுறுத்துகின்றேன் - என்றார்.

## தேசிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வந்து அவற்றை விரைவாகத் தீர்ப்பதற்காக, இந்ததூண்டுதல்ஏற்படுத்தும் கூற்றுக்களை விசாரிப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்கவும்அரசுஉத்தேசித்துள்ளது.

தற்போதைய நிலைமையின் தீவிரத்தன்மைக்கு ஏற்ப தற்போது முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் விரிவாக மீளாய்வு செய்ய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தீர்மானித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழு அறிக்கை மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைக்கு மேலதிகமாக, எதிர்காலத்தில் வெளியிடப்படவுள்ள இந்த இரண்டு அறிக்கைகளும் நாடாளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்பட உள்ளன. சரியான மற்றும் தீர்க்கமான நடவடிக்கைக்கு வழி வகுத்து, நிலைமையைப்பற்றியதெளிவானபுரிதலைசட்டம்இயற்றுபவர்களுக்கு வழங்குவதே இந்த விரிவான செயல்முறையின் நோக்கமாகும்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி முழு நாட்டையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய தொடர் தற்கொலைக்குண்டுத்தாக்குதல்கள் முழு இலங்கையும் சோகத்தில் ஆழ்த்தியதை நினைவுகூர வேண்டியது அவசியம். உயிர்த்த ஞாயிறு ஆராதனைகளில் கலந்துகொண்ட பக்தர்கள் நிறைந்த கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் சொகுசு நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து, கொழும்பு நகரம் மற்றும் அதன் அண்டிய 08 இடங்களில் பேரழிவை ஏற்படுத்தும் 08 வெடிப்புகள் இடம்பெற்றன.

இஸ்லாமிய தீவிரவாத பயங்கரவாதக் குழுக்களினால் நடத்தப்பட்ட இந்த தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 269 அப்பாவி உயிர்கள் பலியாகியதோடு சுமார் 500 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த துயரச் சம்பவத்தின் பாதகமான விளைவுகளுடன் முழு நாடும் திணறிக்கொண்டிருக்கும் வேளையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இந்த நடவடிக்கையானது உண்மையை வெளிப்படுத்தவும், பாரதூரமான குற்றச்சாட்டுகளுக்கு முகங்கொடுத்து பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தவும் எடுக்கப்பட்ட தீர்க்கமான நடவடிக்கையாகும்.

உண்மையைக் கண்டறிவதற்காக இந்த முக்கியமானவிசாரணைகள் நடத்தப்படும் அதேவேளை, பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களதுகுடும்பங்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் முக்கிய நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

## நாடாளு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னதாகும்.

அது தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஆட்சியாளர்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது - என்றார்.

## நாளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவை தொடர்பில் மாவட்டம்தோறும்இணைத் தலைவர் முன்னிலையில் கூட்டங்கள் இடம்பெற்று ஆராயப்படும் நிலையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் இணைத் தலைவரின்தாமதங்களினால் இக் கூட்டம் தடைப்பட்டு வந்திருந்தன.

இந்த நிலையில் இக் கூட்டங்கள் நாளை யாழ்ப்பாணத்தில் காலை 9.30றகும் நாளை மறுதினம் கிளிநொச்சியிலும் இடம்பெறவுள்ளது.

## ராஜபக்ஷக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பத்துக்கும் பொஜன பெரமுன அரசியல்கட்சிக்கும் சர்வதேசத்தினால்தான் அச்சுறுத்தல்காணப்படுகிறது. இதனை கூறினால் பழையகதையைகூறுவதாக பதிலளிப்பார்கள். ஆனால் உண்மை அதுதான். அதன் காரணமாகத்தான் தற்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விடயத்தை பயன்படுத்தி அச்சுறுத்தல் செய்ய முற்படுகின்றார்கள். இதற்கு நாம்அடிபணியபோவதில்லை - என்றார்.

## இணையத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரவுகள் மட்டுமே இணைய தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில்,இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் இணைந்து, இலங்கை கணினிஅவசரதயார்நிலைக் குழு இழந்த தரவுகளை மீட்பதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

மீண்டும் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாத வாறு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் செயற்பட்டு வருகின்றது - என்றார்.

## உண்மை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் சம்பந்தமாக தீர்மானமான தகவல்களை தவிர ஏனைய அனைத்தும் வெளியில் வருகின்றன. குறிப்பாக தாக்குதல் நடைபெறுவதற்கு முன்னதாக பிணையில் வீட்டுக்குச் சென்றார்கள். அங்கு வெடிப்பு சம்பவம் இடம்பெறவில்லை. இது எவ்வாறு நிகழ்ந்தது தாக்குதல் சம்பவத்தை பொறுப்பேற்றுமாறு சிறிய சஹ்ரானுடன் தொலைபேசியில்உரையாடினார்கள். அதற்கான தொலைபேசியினுடைய எமி இலக்கம் அடையாளப்படுத்தப்பட்டு சி.ஐ.டிக்கு கண்டறியுமாறு அனுப்பப்பட்டது. ஆனால் இன்னமும் கண்டறியப்படவில்லை.

ஆகவே, சம்பவத்தை தடுக்காதவர்களும், விசாரணைகளை முன்னெடுக்காதவர்களும்கூட ஆட்சியாளர்கள் உள்ளபோது எவ்வாறு உண்மைகள் கண்டறியப் படும் - என்றார்.

## ஆசாத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குரல்கள் எழுப்பபட்டதோடு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நீதி கோரிய விசாரணைகளும் அவசியம் என்றும் வலியுறுத்தப்பட்டது.

குறித்த கண்டனப் பேரணிக்கு தலைமை தாங்கிய முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளருமான பூ.பிரசாந்தண் கருத்து வெளியிடுகையில் தெரிவித்ததாவது:

ஆசாத் மௌலானாவின் புகலிடகோரிக்கையைதமக்கு சாதகமாகபயன்படுத்திகிழக்கு தலைமையை ஒழிப்பதற்கு போலி தமிழ் தேசியவாதிகள் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். குறிப்பாக கிழக்குக்குத்தலைமைவழங்கும்தமிழ்மக்கள்விடுதலைப் புலிகள் கட்சிக்கு இப்பொழுது சேறு பூசும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் எமது தலைமைக்கும், எமது கட்சிக்கும்தொடர்புஉள்ளதாக பிரசாரம் செய்யப்படுகிறது. இதன்மூலமாக வஹாப்பிச தீவிரவாதிகளை தப்பிக்க வைப்பதற்காகசெயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தபுதியகட்டுக்கதைகளை நாம் வன்மையாக கண்டிப்பதோடு குற்றவாளிகள் தப்பிக்க கூடாது என்பதிலும் எமது கட்சி உறுதியாக இருக்கிறது - என்றார்.

## எவருக்குமே.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரமராக்கி நாட்டில் பெரும் அரசியல் நெருக்கடிகளை தோற்றுவித்தார்.

நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து கடந்த ஜனவரி மாதம் ஹெலிகொப்டர் சின்னத்தில் புதிய அரசியல் கூட்டணியை அமைத்தோம்.

கூட்டணியில் ஒன்றிணைந்து செயற்படுவதாகக் குறிப்பிட்டுவிட்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் உயர் நீதிமன்றம்அவருக்குநட்டஈடு விதித்தபின்னர்கூட்டணியில் இருந்து விலகினார்.

சுதந்திரக் கட்சியை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைக்கும் முயற்சியை அமைச்சு பதவி வகிக்கும் சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் இப்போது முன்னெடுத்துள்ளார்கள்.

இதற்கு கட்சியின் உறுப்பினர்தயாசிறிஜயசேகர தடையாக இருந்ததால் தற்போது அவரை கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்துநீக்கியுள்ளார்.ஆகவே சுதந்திரக்கட்சியின்தலைவர் மைத்திரிபால சிறிசேன இவ்வாறு செயற்பாடாமல் இருந்தால்தான் ஆச்சரியடையவேண்டும்.

நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் அரசியல் தரப்பினரை ஒன்றிணைத்து பலமான அரசியல் கூட்டணியை வெகுவிரைவில் உருவாக்குவோம் - என்றார்.

## தோட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்றுள்ளது.


**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**

**076 3983858**

மின்னஞ்சல் முகவரி: kalaikkathirnews@gmail.com


# கணினி அவசர செயற்பாட்டு பிரிவு விடுத்துள்ள முக்கிய அறிவுறுத்து

கையடக்கத் தொலைபேசிகள்ஊடாகஅனுப்பப்படும் போலியான குறுஞ் செய்திகள் ஊடாக தவறான தகவல்கள்பரப்பப்படுவது தொடர்பில் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளமை குறித்து அவதானமாக இருக்குமாறு இலங்கை கணினி அவசர செயற்பாட்டு பிரிவு மக்களுக்கு அறிவித்துள்ளது. தபால்மூலம்பார்சல் கிடைத்துள்ளதாகவும்முகவரி தெளிவின்மை காரணமாக அதனைத் திருப்பி அனுப்ப வேண்டியுள்ளதாகவும் எனவே, அதனைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் கையடக்கத் தொலைபேசிகள் ஊடாக அனுப்பப்படும் போலியான குறுஞ்செய்திகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் பணம் பெறுவதற்காக மக்களின் இரகசிய தகவல்களை பெற்று பண மோசடி செய்ய வாய்ப்புள்ளதாக இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் இலங்கை கணினி அவசர செயற்பாட்டு பிரிவு மக்களுக்கு அறிவித்துள்ளது.(05)

# பொருளாதார ஸ்திரதன்மை உள்ள போதிலும் பொருளாதார வளர்ச்சி சாத்தியம் இல்லையாம்

## கொழும்பு பல்கலை விரிவுரையாளர் தெரிவிப்பு



நாட்டில் பொருளாதார ஸ்திரதன்மை ஏற்பட்டுள்ள போதிலும் பொருளாதார வளர்ச்சிக்கானவாய்ப்பில்லை என பொருளாதார நிபுணர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

கொழும்பு பல்கலைகழகத்தின் சிரேஸ்ட பொருளியல் விரிவுரையாளர் பிரியங்க துனுசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பொருளாதார ஸ்திரதன்மை காணப்படுகின்ற போதிலும் அதன் காரணமாக பொருளாதார வளர்ச்சி சாத்தியமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார ஸ்திரதன்மையை ஏற்படுத்துவதற்கு அவசியமானசிலகொள்கைகள் பலனளித்துள்ளன என்பதை ஏற்றுக்கொண்டுள்ள அவர் அதனால் பொருளாதார பணவீக்கம்மற்றும்நாணயம் மேலும்பெறுமதிகுறைவதை கட்டுப்படுத்த முடிந்துள்ளதாகவும் குறி;ப்பிட்டுள்ளார்.

எனினும் இந்தக் கொள்கைகள் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த தவறி விட்டன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு கடன்மறுசீரமைப்புத்திட்டம்தொடர்பில் உரிய அமைப்புகள் உடன்பாட்டிற்கு வராவிட்டால் அதனால் சர்வதேச நாணய நிதியத்துடனான எதிர்காலம் பாதிக்கப்படலாம் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.(05)







# தேயிலை ஏற்றுமதியில் அதிக அந்நிய செலாவணி சீனாவுக்கு அடுத்ததாக இலங்கை இடம்பிடித்தது

சர்வதேச ரீதியாக தேயிலை ஏற்றுமதி மூலம் அதிக அந்நிய செலாவணியினை பெறும் நாடுகளில், சீனாவிற்கு அடுத்ததாக இலங்கை தரப்படுத்தப்பட்டுள்ளதாக தேயிலை ஏற்றுமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய தேயிலை கலவையில் தனித்துவத்தை இலங்கை தொடர்ந்து பேணுவதனால் சர்வதேச சந்தையில் சிறப்பான இடத்தை பெற்றுள்ளது.

மேலும் ஒரு கிலோ கிராம் இந்திய தேயிலையின் ஏற்றுமதி கட்டணம் 3.58 அமெரிக்க டொலர்களாகவும், கென்யாவின் ஏற்றுமதி கட்டணம் 2.60 அமெரிக்க டொலர்களாக உள்ள நிலையில், இலங்கை தேயிலையின் சராசரி கட்டணம் 5.10 உள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# போலிப் போலந்து விசாவில் சட்டவிரோதமாக இத்தாலி தப்பிக்க முயன்ற இளைஞன் கைது!

போலி போலந்து வதிவிட விசாவைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் இத்தாலி நாட்டுக்கு தப்பிச் செல்ல முயன்ற இளைஞர் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர். நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் தனது பயண அனுமதிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சமர்ப்பித்த ஆவணங்கள் தொடர்பில் சந்தேகமடைந்த அதிகாரிகள் அவரை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். இந்நிலையில், குறித்த நபரின் கடவுச்சீட்டை பரிசோதித்த அதிகாரிகள் வீசா போலியாக தயாரிக்கப்பட்டமை உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து இளைஞனிடம் மேற்கொண்ட விசாரணையில் தரகர் ஒருவரிடம் 40 லட்சம் ரூபா கொடுத்து போலியான வீசா தயாரிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

குறித்த இளைஞனின் பயணப் பையில் இருந்து இரண்டு போலி குடிவரவு முத்திரைகள் பொறிக்கப்பட்டமற்றொரு கடவுச்சீட்டு, இலங்கை குடிவரவு முத்திரை மற்றும் போலி விமானபயணச்சீட்டு ஆகியவை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட இளைஞனை மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் அதிகாரிகள் ஒப்படைத்துள்ளனர். (05)

# நானு ஓயாவில் இருந்து ஆணின் சடலமாக மீட்பு

**4 பிள்ளைகளினுடைய தந்தை**

நானுஓயா, கிரிமிட்டிய பகுதியில் உள்ள சிறிய நீரோடையில் இருந்து ஆணொருவரின் சடலம் சனிக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா கிலாரண்டன் பகுதியில் வசித்த 4 பிள்ளைகளின் தந்தை வெள்ளிக்கிழமை இரவு முதல் காணாமல்போன நிலையிலேயே அவர் மறுநாள் காலை சடலமாக மீட் கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் நானுஓயா கிலாரண்டன் கீழ் பிரிவைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 49 வயதுடைய சித்திரபாலன் மகேஸ்வரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். நீரோடையில் சடலமொன்று இருப்பதாகப் பிரதேசமக்களால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து, குறித்த இடத்துக்கு விரைந்த நானு ஓயா பொலிஸார் சடலத்தை மீட்டனர். நானுஓயா கிரிமிட்டி நகரப்பகுதிக்கு பொருள்கள் வாங்குவதற்கு செல்வதாக வெள்ளிக்கிழமை இரவு வீட்டிலிருந்து வெளியே சென்றவர் சனிக்கிழமை காலை வரை வீட்டுக்குவராதமையால் உறவினர்களும், பிரதேவாசிகளும் தேடியுள்ளனர். இதனையடுத்து இவர் இவ்வாறு நீரோடையில் இருந்து சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இது கொலையா? தற்கொலையா ? என பல கோணங்களில் நானுஓயா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# குழப்பம் விளைவித்த சுற்றுலாவி கைது

அதிக மதுபோதையில் குழப்பம் விளைவித்த பெலாரஸ் பிரஜையொருவர் ஹபராதுவ பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் குறித்த பெலாரஸ் பிரஜை செயற்படுவதாக கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய அவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பெலாரஸ் நாட்டு பிரஜை அதிக மதுபோதையில் தனது நண்பரையும் தங்கியிருந்த உணவக உரிமையாளரின் மகள் உள்ளிட்டோரை தாக்கியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த பெலாரஸ் நாட்டு பிரஜை பொலிஸாரையும் தாக்குவதற்கு முயற்சித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)



# வடக்கு கிழக்கில் காணியற்றோருக்கு காணிகளைப் பகிர்ந்தளிக்க ஏற்பாடு

**ஸ்ரீ ரங்கேஸ்வரன் தெரிவிப்பு**



யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பகுதிகளில் இரும்புதிருட்டுக்களில் ஈடுபட்டு வரும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க கோரி சம்பந்தப்பட்ட தரப்புக்களிடம் கோரவுள்ளதாக ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவிளாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான இரும்பு திருடர்களை கைது செய்வதற்கும், இரும்புத் திருட்டுக்களைத் தடுக்கவும் சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அத்துடன் வலி.வடக்கு பகுதிகளில் காணி இல்லாமல் முகாம்களில் வாழ்ந்து வரும் மக்களுக்கு வலி.வடக்கில் இனம் காணப்பட்டுள்ள அரச காணிகளை பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# அரிசி ஆலையில் அளவெட்டியில் தீ

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்ட அளவெட்டி வடக்கு பகுதியில் அரிசி ஆலையில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

சனிக்கிழமை காலை 8 மணியளவில் குறித்த தீ ஏற்பட்டுள்ளதாக தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தீ பரவலால் பல லட்சம் ரூபா பெறுமதியான அரிசி ஆலை இயந்திரங்கள் ஏனைய உபகரணங்கள் தளபாடங்கள் என்பன முற்றாகதீக்கிரையாகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் குறித்த தீ பரவலுக்கான காரணங்கள் இதுவரையில் கண்டறியப்படாத நிலையில், தெல்லிப்பழைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# வர்த்தக நிலையத்தில் பற்றிய தீ கட்டுக்குள்

**கிளிநொச்சியில் சம்பவம்**

கிளிநொச்சி வர்த்தக நிலையம் ஒன்றில் பரவிய தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள விற்பனை நிலையம் ஒன்றில் சனிக்கிழமை பகல் ஏற்பட்ட தீ விபத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

தீ பரவல் தொடர்பில் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து கரைச்சி பிரதேச சபையின் தீ அணைப்பு பிரிவினர், கூடியிருந்த பொது மக்கள் மற்றும் வர்த்தகர்களின் உதவியுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதே நேரம் மின்சார சபையினரும் சம்பவ இடத்துக்கு வருகை தந்து பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீ பரவலுக்கான காரணம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# இரத்மலானையில் துப்பாக்கிச் சூடு

**சம்பவத்தில் ஒருவர் காயம்**

இரத்மலானையில் துப்பாக்கிப் பிரயோக சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்மலானை ரயில் நிலையத்துக்கு அருகிலேயே குறித்து துப்பாக்கி பிரயோக சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 46 வயதுடைய நபர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த நபர் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# கிண்ணியாவில் குடிதண்ணீர் தட்டுப்பாடு பவுஸர்கள் மூலம் தண்ணீர் விநியோகிப்பு

**பெற முண்டியடிக்கும் மக்கள்**







திருகோணமலை, கிண்ணியா பகுதியில் கடந்த மூன்று தினங்களாக குடிநீரின்றி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வரும் நிலையில், சனிக்கிழமை அப்பகுதியில் உள்ள மக்களுக்கு 6000 லீற்றர் கொள்ளளவு கொண்ட பவுஸர் மூலமாக குடிநீர் விநியோகிக்கப்பட்டது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊடான நீர்வெட்டு மூன்று நாள்கள் அமுலில் இருந்த நிலையில், குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனை நிவர்த்திக்கும் வகையில் கிண்ணியா நகரசபை ஊடாக பவுஸர் மூலமாக குடிநீர் விநியோகிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் முறைப்பாட்டுக்கமைய, கிண்ணியா நகர சபை செயலாளரின் அதிரடி நடவடிக்கையால் பெரியாற்றுமுனை, பெரிய கிண்ணியா உட்பட பல பகுதிகளில் உள்ள மக்களுக்கு பவுஸர் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டன.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை மூலம் தம்பலகாமம் பகுதியில் திருத்த வேலைகள் காரணமாக நீர் துண்டிக்கப்பட்டாலும் கூட உரிய நேரத்துக்கு நீர் வழங்க முடியாமல் போனதால் குடிநீர் தட்டுப்பாடு நிலவியுள்ளது.

இதனால் பாடசாலை மாணவர்கள், பணிகளுக்குச் செல்பவர்கள் உள்ளிட்ட அப்பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்கள் உரிய நேரத்துக்கு பயணங்களை மேற்கொள்ள முடியாமல் தவிக்கின்றனர்.

கிண்ணியாவில் தொடர்ந்தும் இந்த நிலை அடிக்கடி ஏற்படுவதுடன், அங்கு சீரான குடிநீர் விநியோக முறை இல்லாத காரணத்தாலும் அவதியுறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

பல வருட காலமாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊடான நீர் விநியோகம் சீராக இயங்குவதில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், நீர் கட்டணத்தை மாத்திரம் அதிகரித்துவிட்டு, நீர் விநியோகத்தை மந்த நிலைக்கு கொண்டு சென்றுள்ளனர். அத்தோடு அடிக்கடி திருத்த வேலைகள், நீர் வெட்டு என மக்களை தொடர்ந்தும் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி வருகின்றனர். நீண்ட காலமாக இந்த பிரச்சினை தீர்வின்றித் தொடர்கிறது.

எனவே, முன்னறிவித்தல் இன்றிய நீர்வெட்டு போன்றவற்றை கவனத்தில் கொண்டு சீரான குடிநீரைத் தினமும் பெற்றுத் தருமாறு உரிய அதிகாரிகளிடத்தில் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (05)

# 'நடந்தாய் வாழி வழுக்கை ஆறு'

**குளங்களை பார்வையிடுவதற்கு நடைபயணம் யாழில் ஆரம்பம்**



'நடந்தாய் வாழி வழுக்கை ஆறு' எனும் தொனிப்பொருளில் வழுக்கியாற்றின் வழிதோறும் உள்ள குளங்களை காணும் ஒரு நடைபயணம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.தெல்லிப்பழையில் இருந்து ஆரம் பமான இந்த பயணம் அராலி நோக்கி சென்றது.

இந்த பயணத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் சுரேந்திரகுமார், சுவீடன் விவசாய பல்கலைக்கழக தகைநிலை பேராசிரியர் ஸ்ரீஸ்கந்தராசா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மக்களை மீண்டும் ஏமாற்றும் முயற்சி

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சனல் –4 நிறுவம் வெளிப்படுத்திய தகவல்கள் குறித்தும் குற்றச்சாட்டுக்கள்குறித்தும்ஆராய்வதற்காகஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழுஒன்றும்நாடாளுமன்றத்தெரிவுக்குழுவும் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.**

**இது மக்களை மீண்டும் ஏமாற்றுவதற்கான முயற்சி. அடுத்த தேர்தல்கள் வரையும் கால அவகாசத்தைப் பெறுவதற்கான முழு முயற்சி.**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஏற்கனவே இந்த இரு குழுக்களும் அமைக்கபபட்டு அவற்றின் அறிக்கைகளும் வழங்கப்பட்டுவிட்டன. ஆனால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்தக் குழுக்களின் அறிக்கை இதுவரையில் பகிரங்கப்படுத்தப்படவும் இல்லை.**

**அப்படிப்பட்ட நிலையில் மீண்டும் விசாரணை ஆணைக்குழுவும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் அமைக்கப்படும் என்பது மீண்டும் மக்களை ஏமாற்றும் முயற்சியன்றி வேறெதுவும் இல்லை.**

**மிகப் பாரதூரமான குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள் ளவரான இராஜாங்க அமைச்சர், பிள்ளையானை பதவி நீக்கி விசாரணை நடத்துவதற்குக்கூட இந்த ஆட்சி தயாராகஇல்லைஎன்கிறபோதுஇந்தவிசாரணைகளால் மக்களின் வரிப் பணம் வீணடிக்கப்படுவதைத் தவிர வேறு பயன்கள் எதுவுமில்லை.**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்தியவர்கள் இஸ்லாமிய தீவிரவாதிகள் என்று ஏற்கனவே பொலிஸ் விசாரணை நடத்தப்பட்டு சந்தேகநபர்கள் மீது வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஆனால், அரவ்கள் அனைவரும் அம்புகளே, எய்தவன் இன்னும் இருக்க அம்புகளை நோவதில் பயனென்ன என்பதுதான் இப்போது நாட்டின் முன்னுள்ள கேள்வி.**

**ஜனாதிபதியாகக் கோட்டாபய ராஜபக்ஷவைக் கொண்டு வருவதற்கும் ராஜபக்ஷக்களை மீண்டும் அதிகாரத்திற்குக் கொண்டுவருவதற்குமாகத்தனர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பின்னணியில் இருந்து இயக்கப்பட்டிருக்கின்றது என்பதையே சனல்–4 காணொளி குற்றச்சாட்டாக முன்வைக்கின்றது. இது தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படுவதும்தெரிவுக்குழுஒன்றுநியமிக்கப்படுவதும் பொறுப்புக்கூறவேண்டியவர்களுக்குக் கால அவகாசம் வங்கிஅவர்களைத்தப்பவிடும்நோக்கத்தைக்கொண்டது என்று சந்தேகிப்பதற்கு எல்லா முகாந்திரங்ளும் உண்டு.**

**அதற்கும் மேலமாக இலங்கையில் ஜனாதிபதி ஆணைக்குழுக்களுக்கும்அவற்றின்அறிக்கைகளுக்கும் என்ன நடந்துள்ளது என்கிற வரலாறு அனைவருக்குமே தெரியும். ஒன்றில் ஆணைக்குழுக்களின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்படாது. இல்லை, அப்படியே பகிரங்கப்படுத்தப்பட்டாலும் அதன் பரிந்துரைகள் எவையும் நடைமுறைப்படுத்தப்படாது.**

**அப்படியிருக்கும்போது மீண்டும் மீண்டும் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுவது ஏற்புடையது அல்ல.**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்று நடதத்ப்படவேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர், பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித் போன்றவர்கள் வலியுறுத்துகின்றார்கள். அதனை ஏற்க மறுக்கும்ஆட்சியாளர்கள்நிலமையைச்சமாளிப்பதற்கும் சர்வதேச சமூகத்தைச் சமாளிப்பதற்குமாக மட்டுமே இந்தக் குழுக்கள் நியமிக்கப்படுகின்றன.**

**நாடாளுமன்றத்தில் முழுப் பெரும்பான்மையை பொது ஜன பெரமுனவே கொண்டுள்ளது. இந்த நிலையில் தெரிவுக் குழு மூலம் உண்மைகளைக் கண்டறிய முடியும் என்று எதிர்பாப்பது கானல் நீர் போன்றதே.**

**புதிய நாடு, புதிய அரசியல் என்றெல்லாம் வாய்கிழியப் பேசிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பழைய குருடி கதவைத் திறவடி என்கிற கதையாக மீண்டும் ஆணைக்குழுக்களை நியமிக்கிறேன் என்பது முழு ஏமாற்றம்.**




# விக்கிலீக்ஸ் – ஜுலியன் அசாஞ்சே; ஊடக கருத்துச் சுதந்திர மீறலா ?

## அரச ரகசியங்களை காட்டிக் கொடுத்தவரா ?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

(2012களில் உலக அரசியலில் அதிர்வை ஏற்படுத்திய ஜூலியன் அசாஞ்சே நாடு கடத்தப்படுகிறாரா எனும்கேள்விமீண்டும்எழுந்துள்ளது. மேற்குலகின் அட்டூழியங்களையும், அத்துமீறல்களையும் வெளிப்படுத்தி யவர் ஜூலியன் அசாஞ்சே. அவரின் மீதான கைதானது, அமெரிக்க அரசின் செயற்பாடு ஊடக கருத்துச் சுதந்திர மீறலாகவும் கருதலாம். ஆயினும் மேற்குலகின் அரச இரகசியங்களைக் காட்டிக் கொடுத்தவர் என்ற குற்றச் சாட்டே அவரை இன்றும் சுதந்திர மானநடமாட்டத்திலிருந்துகட்டுப்படுத்தி வைத்துள்ளது. சுயாதீன கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டு, ஜூலியன் அசாஞ்சே நாடு கடத்தப்பட்டால், விசிலூதிகளுக்கு என்ன பாதுகாப்பு என்பதை அலசுகிறது இந்த ஆக்கம்)

ஈராக் போரில் பாக்தாத்தில் அமெ ரிக்கா நடத்திய வான் தாக்குதலில், ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த செய்தியாளர் கொல்லப்பட்டார். அது உள்பட பல தகவல்கள் ஜூலியன் அசாஞ்சே(மூறயிஷ்ழிஜபுவிவிழிஜஆள) வெளியிட்ட ஆவணங்களில் இருந்தன. இந்த ஆவணங்களில் பலவும் ஆட்சி யாளர்களின் அத்துமீறல்களை வெளிக் கொணர்ந்தன.

இரகசியம் என்று அரசுகளால் அறிவிக்கப்படும் கோப்புகளிலிருந்து தகவல்களைப் பெற்று வெளியிடும் பத்தி ரிகையாளர்களின் முயற்சிகளுக்குப் பெரிய தடையாக அமைவது போலி யான குற்றச் சாட்டுக்களும் அடக்கு முறைகளுமே.

ஜனநாயக விழுமியங்களுக்கும், அரசமைப்புச் சட்டங்களுக்கும்கூட அப் பாற்பட்டு அரசு எனும் அமைப்பை மோசமாகக் கையாளும் ஆட்சியாளர் களை அம்பலப்படுத்தும் ஊடகர்களுக்கு என்ன வகையான சட்டபூர்வப் பாதுகாப்பு உலகில்உள்ளதுஎன்பதுகேள்விக்குறியே.

### பாக்தாத்தில் அமெரிக்க தாக்குதல்

அமெரிக்கஇராணுவம்ஈராக்மற்றும் ஆப்கானிஸ்தானில் நடத்திய தாக்குதல் தொடர்பான பல ஆவணங்களை விக்கிலீக்ஸ் இணையதளத்தில் 2010 வெளியிட்டார் அதன் நிறுவனரான ஜூலி யன் அசாஞ்சே. இதனால் உடனடியாக விக்கிலீக்ஸ் மீது குற்ற விசாரணையை அமெரிக்கா தொடங்கியது.

இங்கிலாந்தில் இருந்த ஜூலியன் அசாஞ்சே மீது பாலியல் குற்றச்சாட்டு சுமத்தி, அவருக்குப் பிடி ஆணை சுவீடன் அரசு மூலம் பிறப்பித்தது. இது தன்னை அமெரிக்காவுக்கு நாடு கடத்தும் முயற்சி எனஜூலியன்அசாஞ்சேகுற்றம்சாட்டினார்.

அமெரிக்க அயலுறவுத் துறை அலுவலகம் மற்றவர்களுடன் வைத்திருந்த தொடர்பு, மின்னஞ்சல் தொடர்பு அனைத்தையும் அசாஞ்சே பொதுவெளியில் வெளியிட்டார். இதனால் ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவுக்கு விசாரணைக்காக நாடு கடத்தப்படலாம் என பிரிட்டன் அரசு முன்பு தெரிவித்தி ருந்தது. இந்த நீண்ட கால வழக்கில் தோல்வியைச் சந்தித்த ஜூலியன்

அதன் பின்னர் பிணை விதிகளை மீறி, லண்டனில் உள்ள ஈக்கு வடார் தூதரகத்தில் 2012 தஞ்சம் அடைந் தார். 2019 இவருக்கு வழங்கப்பட்ட அடைக்கலத்தை ஈக்குவடார் அரசு திரும்பப் பெற்றது. அதன்பின் ஜூலியன்






அசாஞ்சேவை இங்கிலாந்து போலீசார் கைது செய்து லண்டன் சிறையில் அடைத்தனர்.

மேற்குலக அரசுகள் மீது உளவு பார்த்ததாக ஜூலியன் அசாஞ்சே மீது 17 குற்றச்சாட்டுகள் உள்ளதால் அவரை அமெரிக்காவுக்கு நாடு கடத்தும்படி இங்கிலாந்து அதிகாரிகளிடம் அமெ ரிக்கா கோரிக்கை விடுத்திருந்தது. அமெ ரிக்க சிறையின் கடுமையான சூழலைச் சந்திப்பது, தன்னை தற்கொலைக்குத் தூண்டும் என ஜூலியன் அசாஞ்சே தரப்பில் கூறப்பட்டதால், முதலில் அமெ ரிக்காவின் கோரிக்கையை லண்டன் நீதிமன்றம் நிராகரித்தது.

இந்த நிலையில், கடந்த சில மாதங் களுக்கு முன்பாக ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவுக்கு விசாரணைக்காக நாடு கடத்தப்பட இருக்கிறார் என்று பிரிட்டன் உள்துறைச் செயலாளர் தெரிவித்தி ருக்கிறார்.

### அவுஸ்திரேலியாவில் பிறந்தவர்

அவுஸ்திரேலியாவில் பிறந்தவரான அசாஞ்சே லண்டனில் உள்ள ஈக்வடார் நாட்டு தூதரகத்தில் 2012 தஞ்சம் புகுந்த பின், இராணுவ அரச ரகசியங்களை வெளியிட்டார்என்றகுற்றச்சாட்டின்பேரில் முதலில்அவரைசுவீடனிலும்பிறகுஅமெ ரிக்காவிலும் விசாரிக்க முற்பட்டனர். பின்னர், சுவீடன் அரசு தனது வழக்கைக் கைவிட்டுவிட்டது.

ஜூலியன் அசாஞ்சே கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருக்கிறார் என்று அவருடைய வழக்குரைஞர் தெரிவித்திருப்பதும், அவருடைய உடல் நலம் குன்றிக் கொண்டேவருவதும் ஜனநாயகத்துக்காகஇப்படிச்செயலாற்றும் விசிலூதிகளின் (Whistle Blowers) பாதுகாப்பு தொடர்பான தீவிரமான கேள்விகளை எழுப்பியுள்ளது. கூடவே நவீன சமூகத்தின் நாகரிக எல்லைகளின் போதாமையையும்இதுசுட்டிக்காட்டுகிறது.

### இங்கிலாந்து உயர் பாதுகாப்பு சிறையில்

இங்கிலாந்தில்உள்ளஉயர்பாதுகாப்புச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அசாஞ்சே தன்னுடைய 'விக்கிலீக்ஸ்' இணையதளத்தின் வழி பல நாடுகளின் மோசமான அரசியலாட்டங்களை அம்பலப்படுத்தி உள்ளார். அசாஞ்சே அம்பலப்படுத்திய விவகாரங்கள் 2012 காலகட்டத்தில் உலகெங்கும் பெரும் நாயகப் (Hero) பிம்பத்தை அவருக்கு உருவாக்கியதும் உண்மையே. அமெ ரிக்காவின் முகத்திரையை கிழித்துக் காட்டியதால், உடனடியாக சர்வதேச அழுத்தங்களின் கீழ் கொண்டுவரப்பட்ட அவர், இப்போது பிரிட்டன் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். தன்னை அமெரிக்கா வசம் ஒப்படைத்து விடக் குகூடாது, அது தன் உயிருக்கு ஆபத்து என்று கோரி நீதிப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார் அசாஞ்சே.

லண்டன் உயர் நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்துவந்தது. அமெரிக்க அரசிடம் அசாஞ்சேவை ஒப்படைத்துவிடலாம் என்று ஊகிக்கப் பட்டது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக பிரிட்டன் உச்ச நீதிமன்றத்தில் அசாஞ்சேவின் வழக்கறிஞர்கள் முறையிட்டனர்.

இதனிடையே கடுமையான உடல் - மன நலப் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார் அசாஞ்சே. மேல் முறையீட்டில்ஒருவேளைதோற்று,அமெ ரிக்காவுக்குஅசாஞ்சேஅனுப்பப்பட்டால், அமெரிக்க சட்ட நடைமுறைகளின்படி 175 ஆண்டுகள் வரை அவர் சிறைத் தண்டனையைஅனுபவிக்கநேரிடலாம்.

### உலக அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்தியவர்

உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு வந்தபோது அமெரிக்க அரசு சார்பில் அளிக்கப்பட்ட உறுதிமொழியை அது ஏற்றது. அசாஞ்சேவை தனிமைச் சிறையிலோ, கொலராடோவில் உள்ள சூப்பர்மேக்ஸ் சிறையிலோ அடைக்க மாட்டோம் என்று அமெரிக்க அரசு உறுதியளித்தது.

அத்துடன் வழக்கு விசாரணைக்குப் பிறகு தண்டனையை அவர் அவுஸ் திரேலிய சிறைகளில்கூட அனுபவிக்கட் டும் என்றும் அமெரிக்க அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதன் விளைவாக அமெரிக்கத் தரப்பை ஏற்றுக்கொண்டது நீதிமன்றம். அமெரிக்க அரசு இன்னமும் துரத்திவருகிறது.

'அரச இரகசியம்' என்ற சொல்லாட லின் கீழ் எதையெல்லாம் மக்கள் பார்வையிலிருந்து மறைத்துவைக்க முடியும்? காலனிய கால அணுகுமு- றையின் நீட்சியாகவும் கடந்துவந்த நூற்றாண்டுகளின் பார்வையையும் இன்னும் எவ்வளவு காலத்துக்குத் தூக்கிச் சுமக்கப்போகிறோம்?

### நீண்ட சட்டப் போராட்டம்

இந்த நீண்ட சட்டப் போராட்டம் நீடித்தால் அது அசாஞ்சேவுக்கும் ஆயுளைப் பாதிக்கும் எனும் அச்சம் இப்போது மேலும் அதிகரிக்கிறது. இது சீக்கிரம் தீர்க்கப்பட வேண்டும்.

முடிவடையாத நீதிமன்ற வழக்குகள் மனதளவில் மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்துகின்றன என்று அசாஞ்சேவின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

உண்மையை வெளிக்கொணர்ந்த தற் காக எதிர்கொள்ளும் சித்திரவதை யானது எவரையும் மனச்சிதைவுக்கு ஆளாக்கிவிடும். அசாஞ்சேவுக்கு ஏற்படும் எந்தஆபத்தும்ஊடகஜனநாயகத்துக்கான இழிவாகவே அமையும். பத்திரிகையா ளராக அவரது பணியைதான் செய்தார். தனது பணியை செய்ததற்காக அவர் தண்டனை அனுபவித்து வருகிறார் என்பதுகண்கூடு. ஊடகர்கள்நவீனசமூக முன்னேற்ற செயல்பாட்டின் முக்கியம ான அங்கங்கள் ஆவர். அவர்களுடைய உயிர்ப்பானசெயல்பாடுஜனநாயகத்துக்கு முக்கியம்.எவ்வாறாயினும்அசாஞ்சேசட்ட ரீதியாகவிடுவிக்கப்படவேண்டும்என்பதே பத்திரிகையாளர்களின் அவாவாகும்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swobpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# பாரதியை மகாகவி என்று இந்த உலகிற்கு அடையாளம் காட்டியவர் விபுலானந்தரே

## இன்று பாரதியின் நினைவு நாள்



எனது கொள்ளுத்தாத்தா சுப்பிரமணிய பாரதியாரின் பெயரை மகாகவி என்று முதன் முதலில் உலகத் திற்கு உச்சரித்தவர் இந்த மண் பெற்றெடுத்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார்தான். பாரதியின் ஆக்கங்களை முதன் முதலில் உலகத் திற்கு எடுத்துக்காட்டிய மாமனிதரும் சுவாமி விபுலானந்த அடிகளாரே.

இவ்வாறு மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்புக்கு வருகை தந்த எட்டயபுரத்து முண்டாசுக் கவிஞன், பாட்டுக்கொரு புலவன் சுப்ரமணிய பாரதியாரின் கொள்ளுப் பேரன் கலாநிதி ராஜ்குமார் பாரதி தெரிவித்தார்.









மீன்பாடும் தேன் நாட்டுக்கு வருகை தந்த ராஜ்குமார் பாரதி, மகாகவி சுப்பிரமணியாரின் மகளான தங்கம்மாவின் புதல்வி லலிதா பாரதிக்கு மகனாகப் பிறந்தவர். இவர் இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பாடல் பொறியியலாளர். இந்தியாவின் பிரபல கர்நாடக இசைக் கலைஞராகவும் பின்னணிப் பாடகராகவும் இருக்கிறார். அவர் வாழ்க்கையில் முதல் முறையாக கடந்த வாரம் மட்டக்களப்பிற்கு வருகை தந்தார். அவருக்குப் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவருக்கு மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்திலும், கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கைகள் நிறுவனத்திலும், கல்லடி ராமகிருஷ்ண மின் ஆச்சிரமத்திலும் பெரு வரவேற்பளிக்கப்பட்டது.

''சுவாமி விபுலானந்தர் பிறந்து வளர்ந்த இந்த மண்ணில் காலடி எடுத்து வைத்தபொழுதுஒருவிதபுத்துணர்ச்சியும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது. விபுலானந்த சுவாமிகள் எனது கொள்ளுத் தாத்தாவுக்கு அளித்த மாபெரும் கௌரவத்தை நினைவு கூருமுகமாக, நன்றி கூருமுகமாக நான் இன்று முதல் தடவையாக

இங்கு வருகை தந்திருக்கின்றேன். எனது வாழ்க்கையில் இன்று மறக்க முடியாத நாள். சந்தோமாக உள்ளது'' என்றார் ராஜ்குமார் பாரதி.

''உண்மையிலேயே பாரதியாரை இன்றும் இலங்கை மக்கள் இத்துணை நேசிக்கின்றார்கள் என்றால் அதற்கு காரணம் அவரது படைப்புகள். ஆனால் அவற்றை உலகிற்கு வெளிக்கொணர்ந்தது சுவாமிகளே.

பாட்டுக்கு ஒரு புலவன் பாரதியார் என்று அன்று தொடக்கம் இன்று வரை பேசப்பட்டு வருகின்ற எனது கொள்ளு தாத்தாவின் பெயரை முதல் முதலில் மகாகவிஎன்று உச்சரித்தவர் சுவாமி விபுலானந்தர் . அது மாத்திரம் அல்ல அவரது படைப்புக்களை ஆக்கங்களை வெளிக் கொண்டு வந்தவரும் அவரே. எனவே அவர் நாமத்திலே இயங்கும் இந்த கல்வி நிறுவனத்தில் வருகை தந்து உரையாற்றியதையிட்டு மிகவும் சந்தோம் அடைகின்றேன்". என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்லடி இராம கிருஷ்ணமின்இல்லத்திற்குவருகைதந்த அவரை இல்ல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் வரவேற்றார்.

கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அடிகளார் அழகியல் கற்கை நிறுவகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி பேராசிரியர் சி.மௌனகுரு உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஆகியோரும்நிகழ்வில்கலந்துசிறப்பித்தார்கள்.

இதேவேளை, மஹாகவி பாரதியாருடைய கொள்ளுப்பேரன் கலாநிதி.இராஜ்குமார் பாரதி மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழவகியற் கற்கைகள் நிறுவனத்திற்கும் வருகை தந்தார்.

நிறுவகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கென்னடி தலைமையில் மாபெரும் நிகழ்வு இடம்பெற்றது. நடைபெற்ற அந்நிகழ்வுக்கு, ஆன்மீக அதிதியாக சுவாமி நீலமாதவனானந்தஜீ மஹராஜ் முன்னிலை அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா.செல்வராசா பிரதம அதிதியாக கிழக்குப்பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் சிறப்பு அதிதியாக இளைப்பாறிய பேராசிரியர் சி. மௌனகுரு ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்வில் பாரதியாருடைய கவி வரிகளில் உருவாக்கப்பட்ட பாடல்கள் இசை ஆற்றுகைகளாகவும் நடன ஆற்றுகைகளாகவும் இடம்பெற்றன. அத்தோடு, மஹாகவி பாரதியாருடைய கொள்ளுபேரனாகியகலாநிதி.இராஜ்குமார்

பாரதி அவர்களின் மட்டக்களப்பு வருகையைத் தடம்பதிக்கும் முகமாக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் முன்னால் அமைந்துள்ள பிரதான வீதியில் சுவாமி விபுலானந்தரினால் ஆராய்ச்சி செய்யப்பட்ட யாழ் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ராஜ்குமார் பாரதிக்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவினால் கௌரவம் வழங்கப்பட்டது. மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் கருத்து தெரிவித்த மகா கவியின் பேரன் பாரதி கண்ட புதுமைப் பெண்ணை இங்கு காண்பதாகவும், இவ்விடத்தை பாரதி, பார்த்தால் தான் கண்ட இப்புதுமைப் பெண்களை பார்த்து மகிழ்ந்திருப்பார் என்றும் தெரிவித்தார்.

மகாகவியின்வாழ்க்கைவரலாற்றில் இடம்பெற்றசுவாரஷ்யமானநிகழ்வுகளை கொள்ளுப்பேரன் பாடலாகவும் கதையாகவும் கூறி மீட்டினார்.

# பாருலகில் நீவரமாய் இருக்கின்றாய் பாரதியே!





பாரதியின் பாட்டாலே பலபேரும் விழித்தனரே
வேருக்கு நீராக விரைந்துமே சென்றதுவே
பாரதியின் கற்பனையில் பாரதமே இருந்திடினும்
ஊரையெலாம் உலுக்கும்படி உணர்வாக எழுந்ததுவே
வறுமைதனில் வாடிடினும் வற்றாத கற்பனையால்

நிறைவுடைய கவிதைகளை நீள்புவிக்குத் தந்தானே
வேதத்தை கற்றிடினும் விதம்விதமாய் யோசித்து
பாதகத்தை சாடியதால் பலபேரும் போற்றினரே
பாப்பாவை பார்த்தவன் பாடிய பாட்டலெல்லாம்

கேட்பார்க்கு எல்லாமே கீதையாய் இருக்கிறது
மொழிபற்றி பாடியது முழுதுமே உண்மையென
மொழியறிஞர் பாராட்டு முண்டாசுக் கவிஞனுக்கே
பாரதியின் கற்பனையால் பலகவிஞர் நிலையிழந்தார்

ஆழமுள்ள கவிதைகளை அவனெமக்கு தந்தானே
புதுக்கவிதை பொங்கிவர புலவரெலாம் வெகுண்டனரே
புதுவெள்ளம் போல்கவிதை புறப்பட்டு வந்ததுவே
அழகுதமிழ் பாவாணர் அனைவருமே வியந்தார்கள்

பழகுதமிழ் சொற்களிலே பாரதியின் கவிகேட்டு
சோதனைகள் பலகண்டான் சாதனைகளாக்கி நின்றான்
போதனைகள் பலசொன்னான் புனிதமிக்க தமிழ்க்கவிஞன்
தெளிவுடனே சேதிகளை செந்தமிழால் பாடிநின்ற

துணிவுநிறை பாரதியை துதிபாடி நிற்போமே
அவனுடைய கவிதைகளை அகமிருத்தி வைப்போம்
தமிழன்னை வாழ்த்துவாள் தமிழுமே மகிழுமன்றோ
வறுமைத் தடாகத்தில் மலர்ந்திட்ட மாமலரே

தறிகெட்ட மனிதரை குறிபார்த்த மாகவியே
விடுதலைச் சிறகுகளை விரித்திட்ட பெருங்கவியே
வீழ்வேனா எனவுரைத்து வித்தானாய் புரட்சிக்கு
மடமைத் தனத்துக்கு மாலையிட்டார் மண்டியிட

அடிமைத் தளையிருந்தார் அலறியே ஓடிவிட
பொடிவைத்து பாட்டிசைத்து போக்கியே நின்றாயே
பொல்லாதார் வசையெல்லாம் பொசுங்கிவிடச் செய்தனையே
பாப்பாக்கு பாட்டுரைத்து பலகாரம் கொடுத்தாயே

பாஞ்சாலி கதையெடுத்து பகர்ந்தாயே சுயவுணர்வை
வருமென்னும் நம்பிக்கை மனமுழுக்க கொண்டதனால்
வருமுன்னே விடுதலைக்கு பாடிவிட்டாய் பள்ளுதனை
வேதத்தில் திளைத்தாலும் வில்லங்கம் வெறுத்தாயே

பாதகத்தை மிதித்துவிட கோபத்தை விரித்தாயே
சோதனைகள் அத்தனையும் சாதனையாய் கொண்டாயே
சுறுசுறுப்பின் உருவாக சுடராக எழுந்தாயே
மூடத் தனத்தை முற்றாக வெறுத்திட்டாய்

முத்திக்கு வித்தான பக்குவத்தை விதைத்திட்டாய்
வேண்டாத குப்பைகளை வீசியே எறிந்திட்டாய்
வீண்வாதம் செய்வோரை வெந்தணலில் வீசிட்டாய்
பசியுந்தன் கூடவரும் பாட்டதற்கு விருந்தாகும்

பசிகண்டு வெகுண்டதால் பாரழிப்பேன் என்றாயே
பசிபற்றி நீயறிவாய் பசியழிக்க நீபுகன்றாய்
பாரதத்தின் விடிவுக்காய் பட்டினியை யேற்றாயே
அன்னைத் தமிழின் அக்கினிக் குஞ்சானாய்

அமிழ்தமெனத் தமிழை அரியாசனம் வைத்தாய்
அஞ்சாமைக் குணத்தை ஆளுமை ஆக்கினாய்
அடிமை இருளகற்ற ஆகிநின்றாய் ஆதவனாய்
தீர்க்க தரிசனமாய் பலவுரைத்த தமிழ்க்கவியே

திக்கெட்டும் சென்று செல்வங்கள் சேரென்றாய்
சேர்த்த வனைத்தையும் கொண்டிங்கு வந்து
நலந்திகழ நல்லவற்றை பெருக்கென்றாய் பெருங்கவியே
பாடிய பாட்டனைத்தும் பட்டொளி வீசுதையா

பட்டிதொட்டி எல்லாமே பாட்டொலித்து நிற்குதையா
பாமரரும் படித்தவரும் படிக்கின்றார் விருப்புடனே
பாருலகில் நீவரமாய் இருக்கின்றாய் பாரதியே
எட்டய புரமீந்த ஈடில்லா கவியரசே
எந்தமிழை இனிதென்று இயம்பிட்டாய் துணிவுடனே
உன்நாவால் வெளிவந்த உயர்வான சிந்தனையால்
உனையெண்ணி தமிழன்னை உவகையுடன் திகழுகிறாள்

எத்தனையோ தத்துவங்கள் எடுத்துரைத்தாய் தமிழ்க்கவியே
அத்தனையும் ஆன்மீகம் சமுதாயம் அடங்கிற்றே
சொத்தாக உன்னாக்கம் தமிழுக்கு வாய்த்ததுவே
சத்தாகத் தமிழுக்கு வாய்த்தகவி நீதானே

உன்பாடல் உச்சரிக்கா பேச்சாளர் எவருமிலை
உன்பாடல் கையாள எழுத்தாளர் எவருமிலை
உன்கருத்து அத்தனையும் உத்வேகம் அளித்ததுவே
உள்ளமெலாம் உறைகின்றாய் உணர்ச்சிக்கவி பாரதியே

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.


JAFFNA'S FIRST HOUSING & CONSTRUCTION EXHIBITION
JAFFNA HOUSING & CONSTRUCTION EXHIBITION 2023
யாழ் மண்ணில் முதல் முறையாக
யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமான
கண்காட்சி 2023
FOR ENQUIRY CALL MINHAJ 077 888 2700
கட்டிட நிர்மாணம், வீடமைப்பு
மற்றும் வீட்டு உபகரணங்கள்
தொடர்பான அனைத்து விடயங்களும்
ஒரே கூரையின் கீழ்.
அனைவரையும் அழைக்கின்றோம்
15 16 17
SEPTEMBER
MUTTRAWELI GROUNDS, JAFFNA
Official Sponsor
Hayleys Aventura Innovative Solutions
Organizer
Iyngaran Media Solution (Pvt) Ltd.
In Association
CCI Chamber of Construction Industry of Sri Lanka
Radio Partner
Print Media Partner
வீரகேசரி
Digital Media Partner
காலைக்கதிர் Kalaikkathir

காலைக்கதிர்
Kalaikkathir

# கைது

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் போலியான பெறுபேற்று சான்றிதழை சமர்ப்பித்து 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் ஆசிரியர் சேவையில் கடமையாற்றிய நபரை யாழ்ப்பா ணம் சிறப்பு குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

அவருக்கு போலி பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழை தயாரித்து வழங்கியவரும்கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர் .

ஆசிரியர் சேவை பதவிநிலை உயர்வு பெறு வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேற்று சான்றிதழ் உறுதிப்படுத்தலுக்காக பரீட் சைத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்ட போதே அது போலியானது எனக் கண்டறியப்பட்டு மோசடி குற்றச்சாட்டின் கீழ் சிறப்பு குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுகல்விவலயபாடசாலை ஒன்றில் கற்பித்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

குறித்த நபர் இராணுவ சிவில் பாதுகாப்பு திணைக் களத்தில் கடமை யாற்றிய சில வருடங்களின் பின் மாகாண கல்வி அமைச்சால் தொண்டர் ஆசிரியராக இணைக்கப்பட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டில் தொண்டர் ஆசிரியர்களை ஆசிரியர் சேவை தரம் 3 இற்கு உள்ளீர்க்கும் போது குறித்த நபருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

3 வருடங்களுக்கு மேலாக ஆசிரியராக சம்பளம் பெற்று வந்த நிலையில் பதவிநிலை உயர்வுக்காக கல்வித் தகைமை ஆவ ணங்களை அவர் சமர்ப் பித்துள்ளார்.

க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரப்பரீட்சைசான்றிதழ்பரீட்சைகள் திணைக்களத்துக்குஉறுதிப்படுத்தலுக்காக அனுப்பிவைக்கப்பட்டன.

அவற்றில் க.பொ.த. உயர்தர பரீட்சை சான்றிதழ் சுட்டெண் தவறு என்பது கண்டறியப்பட்டு பரீட்சைகள் திணைக்களத்தால் பொலிஸ் திணைக்களத்துக்கு குறித்த நபர் மீது மோசடி குற்றச்சாட்டின் கீழ் அறிக்கையிடப்பட்டது.

பொலிஸ் திணைக்களத் தால் குறித்த நபர் மீதான விசாரணை யாழ்ப்பாணம் பொலிஸ் சிறப்பு குற்ற விசாரணை பிரிவுக்கு மாற் றப்பட்டது.

பொலிஸ் பரிசோதகர் குணரோஜன் தலைமையிலான சிறப்பு குற்ற விசா ரணை பிரிவினர் விசார ணை களை முன்னெ டுத்து மோசடி நபரைக் கைது செய்தனர்.

அத்துடன், அவருக்கு உயர்தரப் பரீட்சையின் போலி சான்றிதழை தயாரித்து வழங்கிய நபரும் கைது செய் யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட மோசடி நபர் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளில் சித்தியடையவில்லை என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்ததாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். கைது செய்யப்பட்ட இருவரும் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் முற் படுத்தப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# திரைப்படங்களுக்கான களமாக இலங்கை பிரபலப்படுத்தப்படும்

## சுற்றுலா ஊக்குவிப்பு பணியக தலைவர் தெரிவிப்பு









கடந்த பல ஆண்டுகளாக இந்திய, ஐரோப்பிய மற்றும் ஹாலிவுட் சினிமாக்களுக்காக இலங்கையை படப்பிடிப்பு தளமாக விளம்பரப்படுத்தி வருகிறோம்.தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் மற்றும் இதர துறைசார் பங்குதாரர்கள் உட்பட சர்வதேச திரைப்பட தயாரிப்பாளர்கள் இலங்கையை தங்களின் சிறந்த திரைப்பட இடமாகத் தெரிவுசெய்ய ஊக்குவிப்பதற்காக பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளதாக இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் தலைவர் சாலக கஜபாகு தெரிவித்தார்.

பத்மாவத், விக்ரம் வேதா, கல்லி பாய், மேட் இன் ஹெவன், ஏர்லிப்ட் மற்றும் ராக்கெட் பாய்ஸ் ஆகியவற்றின் திரைப்பட நிறுவனங்களின் தயாரிப்பாளர்கள் இலங்கையில் திரைப்பட சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக வருகை தந்துள்ளனர். கொழும்பு, கண்டி, நுவரெலியா, எல்ல, அம்பாந்தோட்டைமற்றும்களுத்துறை ஆகிய இடங்களை உள்ளடக்கிய ஆறு நாள் பயணத்தில் ஈடுபட்டுள்ள தயாரிப்பாளர்கள், தங்களின் வரவிருக்கும் திரைப்படங்கள், வெப்தொடர்களின் படப்பிடிப்புக்காக இடங்களை பார்வையிடவுள்ளதுடன், மேலும் அவர்கள் முதலீடுகள் மற் றும் ஒத்துழைப்பு குறித்து மேலும்தெரிந்துகொள்ளஇலங்கை சுற்றுலாத்துறை அதிகாரிகள், அரசு நிறுவனங்களுடன் மற்றும் திரைப்படத்துறை தரப்பினருடன் பல முக்கிய சந்திப்புகளை மேற்கொள்ளவுனர். இந்நிலையில் இது தொடர்பிலான விடயங்களை தெளிவுபடுத்தும் ஊடகவி-யலாளர் மாநாடு சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றதுடன் இதன்போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு-

இலங்கை சுற்றுலாவுக்காக திரைப்பட சுற்றுலாக் கொள்கையை நாங்கள் உருவாக்கி, வெளிநாட்டு திரைப்படத் தயாரிப்பாளர்களை இலங்கைக்கு அழைப்பதற்காக எமது நாட்டு தொழில்தரப்பினருடன் சேர்ந்து சர்வதேச திரைப்பட சுற்றுலா மற்றும் திரைப்பட தளங்களை அடையாளம் காண விசேட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தோம். அதன் விளைவாக இந்திய சினிமாவை மையமாக வைத்து 2023ஆம் ஆண்டுக்கான அறிமுகப் பயணத்தை தற்போது நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம்.

கடந்த ஏப்ரலில் கன்னட சினிமாவிலிருந்து ஒரு திரைப்படக் குழுவை நாங்கள் வரவேற்றோம். மேலும் பிரபலமான இந்திய சினிமா மூலம் எமது இலக்கை அடைய மற்றும் அதனை விளம்பரப்படுத்திக்கொள்ள பல இந்திய திரைப்படம் மற்றும் வெப் தொடர்களை தயாரிக்கும் நிறுவனங்களை மிக விரைவில் இலங்கைக்கு கொண்டு வர எதிர்பார்க்கலாம். மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட வெளிநாட்டு திட்டங்களுக்கு உள்நாட்டில் உருவாக்கப்பட்ட ஊக்கத் திட்டத்தை உருவாக்குவது குறித்து ஆலோசித்து வருகிறோம். - என்றார்.

(05)

# நாட்டின் எதிர்காலத்திற்கான ஒன்றிணைவு வரும் ஜனவரி

## நடக்கும் என்கிறார் நிமல் லன்சா

நாட்டின் எதிர்காலத்துக்கான புதிய ஒன்றிணைவு தொடர்பில் எதிர்வரும் ஜனவரியில் பகிரங்கமாக அறிவிக்கவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா தெரிவித்துள்ளதோடு, அதற்கான பேச்சுகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன எனத் தெரிவித்தார்.

பொதுஜனபெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா தலைமையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான ஆளும், எதிர்த்தரப்பை உள்ளடக்கிய அணியொன்று உருவாக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்ற நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேற்படி விடயம் சம்பந்தமாக மேலும் தெரிவிக் கையில் -

நாட்டின் எதிர்காலத் தொடர்பில் கருத்திற்கொண்டுள்ள நான் வரலாற்றில் முக்கியமான செயற்பாடொன்றை முன்னெடுத்து வருகின்றேன்.

அந்த வகையில் நாடாளுமன்றத்தில் உள்ள ஆளும், எதிர்த் தரப்பினருடன் கலந்துரையடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேநேரம், நாடாளுமன்றத்துக்கு வெளியில் தொழிற்சங்கங்களுடனும் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பேச்சுகளும் முன்னேற்றரமாகவே உள்ளன.

அந்த வகையில், எமது புதிய ஒன்றிணைவு தொடர்பில் எதிர்வரும் ஜனவரியில் உரிய அறிவிப்பைச் செய்வதற்கு எதிர் பார்த்துள்ளோம்.

இந்த புதிய ஒன்றிணைவின் மூலமாக நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்ற தலைமைத் துவத்தின் கீழ் இணைந்து பணியாற்றுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. - என்றார்.

(05)

# ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தைக் கொண்டு அரசியல் இலாபம் பெறுவதை ஏற்கமுடியாது

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை கொண்டு நாட்டிலுள்ள தலைவர்கள் அரசியல் இலாபம்பெற முயற்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என தமிழீழ விடுதலை இயக்கம் அமைப்பின் தலைவரும், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெற்ற தமிழ் இன படுகொலைக்கு குரல் கொடுக்காத தலைவர்கள் தற்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்திற்கு குரல் கொடுப்பது வெட்கப்பட வேண்டிய ஒரு விடயம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் செனல் 04 வெளியிட்ட காணொளி பரபரப்பாக பேசப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில் எதிர்கட்சி தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மெல்கம் ரஞ்சித் உள்ளிட்ட பலரும் இந்த தாக்குதல் தொடர்பாக சர்வதேச விசாரணை வேண்டும் எனக் கோரிக்கையை முன் வைக்கின்றனர்.

நாங்களும் இது தொடர்பாக சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கின்றோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், கர்தினால் உள்ளிட்ட அனைவரும் நாட்டில் புரையோடிப்போய்யுள்ள இனப்பிரச்சினையை தீர்க்க வேண்டும் என எண்ணி இருந்திருந்தால், கடந்த காலங்களிலே ஏற்பட்ட இனப்பிரச்சினை மற்றும் மனித உரிமை மீறல்களிற்கு எதிராக குரல் கொடுத்திருக்க வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேலும் தெரிவித்துள்ளார்.(05)

# நாவல் பழம் பறிக்கச் சென்ற சிறுவன் மரத்திலிருந்து தவறி விழுந்து காயம்

## மூதூரில் சம்பவம்

நாவல் பழம் பறிக்கச் சென்ற சிறுவன் மரத்தில் இருந்து தவறி விழுந்து பலத்த காயங்களுக்குள்ளான சம்பவம் சனிக்கிழமை மாலை மூதூரில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் மூதூர் - நடுத்தீவு பகுதியைச் சேர்ந்த 14 வயதான சிறுவனே படுகாயமடைந்துள்ளார்.

மூதூர் - நடுத்தீவு பகுதியைச் சேர்ந்த 14 வயதுடைய எஸ்.சகான் தனது நண்பர்களுடன் நாவல் மரத்தில் ஏறி நாவல் பழம் பறித்துக் கொண்டிருக்கும்போது தவறி விழுந்துள்ளார்.


காயங்களுக்குள்ளான குறித்த சிறுவன் சிகிச்சைக்காக மூதூர் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுவன் இடுப்பு எலும்பு முறிவுக்குள்ளாகியுள்ளதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர் .

தற்போது நாவல் பழத்துக்கான பருவகாலம் என்பதால் பெற்றோர்கள் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் அவதானமாக செயற்படுவது அவசியம். அத்துடன் பல கிராமங்களை சேர்ந்த குடும்பங்கள் பருவத்தில் காய்க்கும் கனிகளை நம்பியே தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்கின்றார்கள் என்பதும் நாவல் பழ விற்பனையில் சிறுவர்கள் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.(05)

# காணித் தகராறில் ஒருவர் கத்தியால் குத்திக்கொலை

## சந்தேகநபர் தலைமறைவு




நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீப்பிலிமான பகுதியில் வெட்டுக் காயங்களுடன் சடலமொன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

வத்தளை பிரதேசத்தை சேர்ந்த 53 வயதுமதிக்கத்தக்க எஸ்.சுந்தரலிங்கம் என்பவரே பலத்த வெட்டுக்காயங்களுக்கு இலக்கான நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

மேலும் இந்தச் சம்பவத்தோடு தொடர்புடைய கொழும்பு வெள்ளவத்தை பகுதியை சேர்ந்த பெண் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்தனர்.

காணி பிரச்சினையால் ஏற்பட்ட முரண்பாட்டாலே சனிக்கிழமை இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் தப்பிச்சென்றுள்ளார் எனவும் இவர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன எனவும் தெரிவிக்கும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

வெட்டு காயங்களுக்குள்ளாகி உயிரிழந்துள்ள நபரின் சடலம் தொடர்பில் நுவரெலியா மாவட்ட நீதிவான் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்ட பின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.09.2023இல் வெளியிடப்பெற்றது.